**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்**

முன்னிலை – திருமதி.P.அனுராதா, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.

2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 04 ம் நாள் சனிக்கிழமை
அசல் வழக்கு எண்.23/2023

-------

எட்டு கிராமத்து கம்பளத்து நாயக்கர்களுக்கு
பாத்தியப்பட்ட இ.முத்துலிங்கபுரம்
கிராமத்திலிருக்கும் அருள்மிகு சக்கதேவி
கோவில் அதன் பரம்பரை பூசாரியும்,
கம்பளத்து நாயக்கர் சமுதாயத்தினரின்
பிரதிநிதியுமான திரு. ச.முத்தையா மூலம்

.... வாதி

/எதிர்/

1) சக்கரைச்சாமி
த/பெ. முத்துராமலிங்கம்
2) ஆறுமுகம்
த/பெ. சந்தன மகாலிங்கம்
3) கந்த வேலம்மாள்
க.பெ. குஞ்சில்சாமி
4) சங்கரவேல்
5) மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
விருதுநகர்.
*6) ச.சக்கரைச்சாமி
*7) ஆ.முத்துபாண்டி
*8) மா.கந்தசாமி
*9) மு.அழகுமூர்த்தி

.... பிரதிவாதிகள்

*** Impleaded as per order in IA 03/2023, dated: 05.12.2023**

*** Amended as per order in IA 06/2026, dated: 24.02.2026.**

இவ்வழக்கு இன்று என் முன்பு விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S.மாரிமுத்து அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. D. பாஸ்கரன் அவர்கள் முன்னிலையாகியும், 5 ம் பிரதிவாதி தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. K. குமரவேல் அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு விசாரணைக்காக போடப்பட்டிருந்த நிலையில் சீர்திருத்த பிராது தாக்கல் செய்ய பல வாய்ப்புகள் வழங்கப்பட்டும், வாதி எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினாலும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும் .....

<u>தீர்ப்புரை</u>

எட்டு கிராமத்தைச் சார்ந்த கம்பளத்து நாயக்கர் சமுதாயத்தினர் அனுபவத்திலும், நிர்வாகத்திலும் இருந்து வரும் இ.முத்துலிங்கபுரம் சக்கதேவி கோயில் மற்றும் அது அமைந்துள்ள சர்வே எண். 117 ல் 16.16 ஏக்கர் நிலத்தில் மையத்தில் சக்கதேவி கோவில் அமைந்துள்ள 1.57 செண்ட் நிலத்தில் அமைந்துள்ள 400 ஆண்டுகால தொன்மையும், ஐதீகமான சக்கதேவி சிலையை மாற்றவோ, கர்ப்பகிரகமான குடிசையினை அகற்றவோ, கோயிலின் சுற்றுச் சுவரான இலந்தை மர வேலியினை அகற்றவோ, மாற்றம் செய்யாமலிருக்க 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் அவரது வகையாறாக்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும், மேலும் 1ம் தபசில் சொத்தான கோயில் நிலத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகளால் அமைக்கப்பெற்றுள்ள தகரக் கொட்டகையான 3 ம் தபசில் சொத்தை அகற்றிட 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும், மற்றும் இந்த வழக்கின் செலவு தொகையை வாதிக்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் கொடுக்கும்படிக்கும் மேலும் இதர பரிகாரங்கள் வழங்கக் கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதிக்கு சீர்திருத்த பிராது தாக்கல் செய்ய பல வாய்ப்புகள் வழங்கப்பட்டு, வாதி உரிய நடைமுறையை பின்பற்றாத காரணத்தினால், இவ்வழக்கின் உண்மையையும், சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 04 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA
மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.
அ.வ.எண்.23/2023
தீர்ப்புரை
04.07.2026.